


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ உடற்கல்வியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வரும் 49 ஆவது சென்னை புத்தகக் காட்சி 2026 ல் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை நேற்று (14.1.2026) பார்வையிட்டார்.

### தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில்

# ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப் பணிகள்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஜன. 15-**

**தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் ரூ.80.62 கோடி செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.1.2026) தலைமைச் செயலகத்தில், பால்வளத் துறையின் கீழ், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் சார்பில் 80 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கால்நடை தீவன உற்பத்தி ஆலை, ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை, நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை, 5 நுண்ணுயிரியல் ஆய்வுக் கூடங்கள் ஆகிய 8 முடிவுற்ற பணிகளை திறந்து வைத்தார்.

ஆவின் நிறுவனம் கிராம அளவில் 9,096 தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட அளவில் 27 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் என்ற மூன்று அடுக்கு கட்டமைப்பில் செயல்பட்டு வருகிறது. ஆவின் நிறுவனம் தற்போது 3.56 இலட்சம் உற்பத்தியாளர்கள் மூலம் நாளொன்றுக்கு சராசரியாக 37.44 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்து 31 லட்சம் லிட்டர் பாலை நாள்தோறும் நுகர்வோருக்கு தமிழ்நாடு முழுவதும் விற்பனை செய்து வருகிறது. இந்திய அளவில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பால் கொள்முதல் செய்யும் மாநிலங்களில் தமிழ்நாடு நான்காவது இடத்தை பெற்றுள்ளது.

**ஆவின் நிறுவனத்தின் சார்பில் திறந்து வைக்கப்பட்ட முடிவுற்ற பணிகளின் விவரங்கள்**

பால் உற்பத்தியாளர்களுக்கு தரமான கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்து பால் உற்பத்தியை அதிகரிக்கவும், தற்போது அதிகரித்து வரும் கால்நடை தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும், தஞ்சாவூர் மாவட்டம், புதுக்குடியில் நபார்டு ஊரக உட்கட்டமைப்பு வளர்ச்சி நிதியின் கீழ் 50 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 300 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட கால்நடை தீவன உற்பத்தி ஆலை;

கோடை மற்றும் வறட்சி காலங்களில் கால்நடைகளுக்கு வருடம் முழுவதும் தரமான பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் சிறப்பு பகுதி வளர்ச்சி திட்ட நிதியின் கீழ் 6.72 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 25 மெட்ரிக் டன் உற்பத்தி திறன் கொண்ட ஊறுகாய்புல் தீவன கட்டுகள் உற்பத்தி ஆலை;

ஆவின் விற்பனை அதிகரிக்கவும், நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் திருச்சி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 21.57 கோடி ரூபாய் செலவில் நாளொன்றுக்கு 6,000 லிட்டர் ஐஸ்கீரிம் தயாரிக்கும் தொழிற்சாலை மற்றும் 10,000 லிட்டர் நொதியூட்டப்பட்ட பால் உபபொருட்கள் தயாரிக்கும் தொழிற்சாலை;

பாலின் தரத்தினை உறுதி செய்யும் வகையில் திருவண்ணாமலை, கடலூர், கரூர், தருமபுரி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 2.33 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நுண்ணுயிரியல் ஆய்வு கூடங்கள்;

என மொத்தம் 80.62 கோடி ரூபாய் செலவில் 8 முடிவுற்ற திட்டப்பணிகளை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் என்.சுப்பையன், பால்வளத் துறைஆணையர்மற்றும்மேலாண்மை இயக்குநர் அ.ஜான் லூயிஸ், இணை நிர்வாக இயக்குநர் திருமதி ச.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்”!

## 15.01.2026 முதல் 27.01.2026 வரை நடைபெறும் இடங்களின் விவரம்!

சென்னை, ஜன.15-

“அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:



**நாள் 15.1.26 வியாழக்கிழமை 330 ஆம் நாள்**

**திரு.வி க நகர் தெற்கு பகுதி**

1) வட்டம் 76அ, ஸ்டாரன்ஸ் ரோடு சென்னை மாநகராட்சி பள்ளி அருகில் சாய்பாபா ஆலயம் அருகில் தலைமை எஸ் .வெங்கடேசன், வட்ட செயலாளர்

2) வட்டம் 73அ, காந்திநகர் புளியந்தோப்பு, திரு. வி.க.நகர்தொகுதி, ஐ.டி விங் ஒருங்கிணைப்பாளர்ஜெ. அவினாஷ்

**நாள் 16.1.26 வெள்ளிக்கிழமை 331 ஆம் நாள்**

**அம்பத்தூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 86, தமிழ்நாடு வாழ்வு மேம்பாட்டு வாரியம், ஐ .சி.எஸ் காலனி, அத்திப்பட்டு வட்ட செயலாளர் M.கமல் MC

2) வட்டம் 85, சிவானந்த நகர், வட்ட செயலாளர் த. கண்ணபிரான்

**நாள் 17.1.26 சனிக்கிழமை 332 ஆம் நாள்**

**கொளத்தூர் மேற்கு பகுதி**

1) வட்டம் 64அ, ஜம்பு லிங்கம் மெயின் ரோடு, G.K.M காலனி 35 வது தெரு கனரா வங்கி அருகில், வட்ட செயலாளர் - M.D.தமிழ்செல்வன்

2) வட்டம் 64, சீனிவாசன் நகர் மெயின் ரோடு, டான் பாஸ்கோ பள்ளி அருகில், வட்டசெயலாளர் S.முருகன்

**நாள் 18.1.26 ஞாயிற்றுக்கிழமை 333 ஆம் நாள்**

**கொளத்தூர் கிழக்கு பகுதி**

1)வட்டம் 70அ, பந்தர் கார்டன் மெயின் தெரு, பெரம்பூர். வட்ட செயலாளர் D. சந்திரசேகர்

2) வட்டம் 67அ, திரு. வி.க.நகர் பஸ் நிலையம், வட்டச் செயலாளர் K. ஜார்ஜ் குமார்.

**நாள் 19.1.26 திங்கட்கிழமை 334 ஆம் நாள்**

**வில்லிவாக்கம் மேற்கு பகுதி**

1) வட்டம்104, தங்கம் காலனி, அண்ணாநகர் மேற்கு, வட்ட செயலாளர் சொ. முருகேசன்

2) வட்டம் 104அ, டி. வி நகர் திருமங்கலம் வட்ட செயலாளர் ப. லோகு பாபு

**நாள் 20.1.26 செவ்வாய்கிழமை 335 ஆம் நாள்**

**அம்பத்தூர் கிழக்கு பகுதி**

1) வட்டம் 83அ, R.K லிங்க் சாலை தாதம் குப்பம் வட்ட செயலாளர் சு. மோகன் குமார்

2) வட்டம் 83 விநாயகர் கோயில் அருகில் சிவலிங்கபுரம் கொரட்டூர் அக்கிரக்ஹரம் வட்ட செயலாளர் சீ. லோகநாதன்

**நாள் 21.1.26 புதன்கிழமை 336 ஆம் நாள்**

**திரு.வி.க நகர் வடக்கு பகுதி**

1) வட்டம் 71அ, ஈடன் கார்டன் ஜமாலியா வட்டக் கழக செயலாளர் மா. ருத்ரமூர்த்தி

2) வட்டம் 74, ஏகாங்கிபுரம் மெயின் தெரு, ஓட்டேரி, வட்டக் கழக செயலாளர் எஸ். புஷ்பராஜ்

**நாள் 22.1.26 வியாழக்கிழமை 337 ஆம் நாள்**

**எழும்பூர் வடக்கு பகுதி**

1) வட்டம் 78, தானா தெரு, புரசைவாக்கம், வட்ட செயலாளர் சு. மனோகர்

2) வட்டம் 77, டிம்லெஸ் மெயின் ரோடு, P4 போலீஸ் நிலையம் அருகில், டிமலஸ் ரோடு, குடிசை மாற்று வாரியம் வட்ட செயலாளர் தி. தயாளன்

**நாள் 23.1.26 வெள்ளிக்கிழமை 338 ஆம் நாள்**

**எழும்பூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 108, வைத்தியநாதன் தெரு, செல்வ விநாயகர் கோயில் அருகில், வட்ட செயலாளர் K.S வான்மதி கதிரவன்

2) வட்டம் 108அ அம்பேத்கர் திடல் சேத்துப்பட்டு வட்ட செயலாளர் L. சுந்தர்ராஜன் MC

**நாள் 24.1.26 சனிக்கிழமை 339 ஆம் நாள்**

**துறைமுகம் தொகுதி**

1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 60அ, அன்னை சத்யா நகர் ஏ. பி. பகுதி, வட்டச் செயலாளர் ஆ. நா. பார்த்திபன்

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம், பி.கே.ஜி.கார்டன் அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1. வட்ட செயலாளர் பா.கதிரவன்

**நாள் 25.1.26 ஞாயிற்றுக்கிழமை 340 ஆம் நாள்**

**வில்லிவாக்கம் கிழக்கு பகுதி**

1) வட்டம் 96, தாகூர் நகர், KJH ரோடு சந்திப்பு, வட்ட செயலாளர் A.வேதா

2) வட்டம் 98அ, கே.எச். ரோடு, மார்கெட் தெரு சந்திப்பு, வட்ட செயலாளர் காஞ்சி செ.துரை

**நாள் 26.1.26 திங்கட்கிழமை 341 ஆம் நாள்**

**அம்பத்தூர் தெற்கு பகுதி**

1) வட்டம் 88 கலைவாணர் நகர் மெயின் ரோடு கொடிக்கம்பம் அருகில் வட்ட செயலாளர் சி. சீனிவாசன்

2) வட்டம் 87, அங்கமுத்து நகர் பாடி வட்ட செயலாளர் த. பிரகாஷ் குமார்

**நாள் 27.1.26 செவ்வாய்கிழமை 342 ஆம் நாள்**

**துறைமுகம் தொகுதி**

1) துறைமுகம் கிழக்கு பகுதி: 56வது வட்டம் பிடாரியார் கோயில் தெரு சைவ முத்தையா திரு சந்திப்பு. வட்ட செயலாளர், த. கதிரவன் (எ)ராஜா

2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59, ரட்டன் பஜார், சென்னை-3. வட்ட செயலாளர் டி.சத்தீஷ்குமார்.

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு,எஸ்.முரளி, ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் - மாவட்டச் செயலாளர் பி.கே. சேகர்பாபு அறிவித்துள்ளார்.

### ஆவடி மாநகராட்சி திருமுல்லைவாயில் பகுதியில் சமத்துவப் பொங்கல் விழா:

# விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கண்காட்சி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்!

திருவள்ளூர், ஜன 15;-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி மண்டலம் 2 கணக்கன்குட்டை பகுதியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு அனைவரும் சேர்ந்து இடுபொருட்களை ஈட்டு பொங்கல் பணையில் பொங்கல் வைத்தனர்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங்குகளை பார்வையிட்டனர். கலை நிகழ்ச்சிகளை பார்வையிட்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர் , உரி அடி நிகழ்வில் பங்கேற்று சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பணையை உடைத்தனர்.

அப்போது அமைச்சர் கூறியதாவது

பொங்கல் திருநாளானது பயிர்கள் விலைவிக்க காரணியாக உள்ள சூரியனுக்கு நன்றி சொல்லும் நிகழ்வு இந்தியாவில் தமிழ்நாட்டிலும் ஜப்பன் நாடு ஆகியவை மட்டுமே. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணைப்படி 260 அயலகத் தமிழர்கள் 70 - நாடுகளிருந்து பழமை மாரமல் இருக்க பொங்கல் திருநாள் கொண்டாடும் விதமாக பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். 33 இலட்சம் தமிழர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றனர். இவ்வாறு உள்ள தமிழர்கள் தனித்து விடபட கூடாது என்பதற்காக அயலகத் தமிழர் தினத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து அவர்களது நலனுக்காக அற்பனித்துள்ளார். பொங்கல் பரிசு தொகுப்பு ரூ.3000 ரொக்கம், கொரோன காலக்கட்டத்தில் ரூ.4000 - மும் , மகளிர் விடியல் பயணத் திட்டம், மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம் போன்ற திட்டங்களோடு அயலகத்திலுள்ள தமிழர்களுக்கு சங்கங்களை உருவாக்கி அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யும் விதமாக விபத்துகளில் இறந்தவர்களுக்கு ரூ.10இலட்சமும் , கை, கால் இழந்தவர்களுக்கு ரூ.5 இலட்சமும், சட்ட சிக்கல்களை கலைய சட்ட வல்லுநர்கள் எற்பாடு செய்யப்பட்டும் , ஓய்வூதியங்களும் வழங்க தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். 59,420 நபர்களும் 19,152 புலம் பெய்ர்ந்த தமிழ் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு ரூ.640 கோடி மதிப்பீட்டில் 10,228 வீடுகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கட்டி கொடுத்துள்ளார்கள்.

இவ்வாறு அமைச்சர் சா.மு. நாசர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சிகளில். ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆணையர் ர. சரண்யா, மண்டலகுழு தலைவர்கள் அமுதா பேபி, ஜி. ராஜேந்திரன், என்.ஜோதிலட்சுமி, வி.அம்மு, மாநகர பகுதிச் செயலாளர்கள் சன்.பிரகாஷ், பேபிசேகர், ஜி. நாராயண பிரசாத், பொன். விஜயன், ஆவடி மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் திரளான பொதுமக்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி மண்டலம் 2 கணக்கன்குட்டை பகுதியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் அமைச்சர் சா.மு.நாசர்கலந்துகொண்டு அனைவரும் சேர்ந்து இடுபொருட்களை இட்டு பொங்கல் பானையில் பொங்கல் வைத்து விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக அமைக்கப்பட்டுள்ள அரங்கங்களை பார்வையிட்டு நெல் கதிரில் ஈடுபட்டார் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மேயர் கு.உதயகுமார், ஆணையர் ர.சரண்யா, மண்டலகுழு தலைவர்கள் அமுதா பேபி, ஜி.ராஜேந்திரன், என்.ஜோதிலட்சுமி, வி.அம்மு, மாநகர பகுதிச் செயலாளர்கள் சன்.பிரகாஷ், பேபிசேகர், ஜி.நாராயண பிரசாத், பொன்.விஜயன், ஆவடி மாநகராட்சி அலுவலர்கள், பணியாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் திமுக நிர்வாகிகள் திரளான பொதுமக்கள் உள்ளனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதி திருத்தணி தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட கே.ஜி. கண்டிகை கிராமத்தில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன், எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் திராவிட தைப்பொங்கல் தமிழர் திருநாளை முன்னிட்டு கழக ஆட்சியின் சாதனைகளை விளக்கும் கலை நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சினை ஏராளமான பொதுமக்கள் கலந்துக் கொண்டு கழக ஆட்சியின் சாதனைகளை பார்த்தும் கேட்டும் மகிழ்ந்தனர். உடன் திருத்தணி தெற்கு ஒன்றிய செயலாளர் கே. இராஜேந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி. வாலாஜாபாத் தெற்கு ஒன்றியம். குன்னவாக்கம் ஊராட்சியில்.திராவிட சமத்துவ பொங்கல் விழாவில். மாவட்ட கழக செயலாளர். க. சுந்தர் எம்.எல்.ஏ கலந்துகொண்டு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கினார். உடன் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், பி. சேகர், தேவேந்திரன். டி.சஞ்சய் காந்தி. ஆர். குப்புசாமி ஊராட்சி மன்ற தலைவர். திருமதி புவனேஸ்வரி குப்புசாமி துணைத் தலைவர் ரகு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.